ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

අති විශෙෂ அதிவிசேஷமானது EXTRAORDINARY

අංක 1142 / 20 – 2000 ජූලි 27 වැනි බ්‍රහස්පතින්ද – 2000.07.27
1142 / 20 ஆம் இலக்கம் – 2000 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆம் திகதி வியாழக்கிழமை
No. 1142 / 20 – THURSDAY, JULY 27, 2000

(ආණ්ඩුවේ බලය පිට ප්‍රසිද්ධ කරන ලදී.) (அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது) (Published by Authority)

# I වැනි කොටස : (I) වැනි ජේදය — සාමාන්‍ය

ආණ්ඩුවේ නිවේදන

1978 අංක 16 දරන විශ්වවිද්‍යාල පනත

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*எல். டி. – பீ 21/78* IV.

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

*சித்ரா சிரியாணி கருணாரத்ன,*
*செயலாளர்,*
*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு.*

கொழும்பு,
*25.07.2000.*

*கட்டளைச் சட்டம்*

*1. இக்கட்டளைச் சட்டம் 2000 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, தொழில்நுட்ப நிறுவகக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2000.08.01 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*2. (இதனகத்துப் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 அ என்னும் பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட 2000 மார்ச் 07 ஆந் தேதிய கட்டளைமூலம் தாபிக்கப்பட்ட (இதனகத்துப் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொழில்நுட்ப நிறுவகத்துக்கு இக்கட்டளைச் சட்டம் ஏற்புடையதாதல் வேண்டும்.*

*3. இந் நிறுவகம் (இதனகத்துப் பின்னர் "பல்கலைக் கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும்.*

*4. சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாகவும் (இதனகத்துப் பின்னர் "ஆணைக் குழு" எனக்குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தத்துவங்களுக்கும் கடமைகளுக்கும் பணிகளுக்கும் அமைவாகவும் நிறுவகம் பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.*

*(அ) தொழில்நுட்பப் பயிற்சிநெறியில் தேசிய திப்புளோமாவையும் (இது இதனகத்துப் பின்னர் தொ. தே. தி. எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் சிபார்சின் மீது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான இதையொத்த மட்டத்திலான தொழில்நுட்பப் பயிற்சிநெறிகளையும் நடாத்துதல் ;*

*(ஆ) ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும் பல்கலைக்கழகத்தின் ஆலோசனையுடனும் மாணவர்களைத் தெரிவுசெய்தலும் அனுமதித்தலும் ;*